பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

30 09 2025 6 45

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு நாட்டில் சிறந்த நிர்வாகத்தை உறுதி செய்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. விமானப் பயணிகளின் பயணத்தை எளிதாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக சிவில் விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் 3 ஆயிரத்து 700 ஆலயங்களில் குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளதாக மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர் பாபு கூறியுள்ளார்.

4. தமிழகத்தின் ஓரிரு இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஐ.சி.சி. மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு நாட்டில் சிறந்த நிர்வாகத்தை உறுதி செய்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தில்லியில் பிஜேபியின் புதிய அலுவலகத்தை திறந்து வைத்துப் பேசிய அவர், மக்களின் சேமிப்பை அதிகரிக்க மத்திய அரசு முன்னுரிமை அளித்து செயல்படுவதாகத் தெரிவித்தார்.

2014ஆம் ஆண்டுக்கு முன்பு 2 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட வருமானத்திற்கு, வருமான வரி விதிக்கப்பட்டதாகவும், தற்போது 12 லட்சம் ரூபாய் வரையிலான வருமானத்திற்கு வரி இல்லை என்றும் குறிப்பிட்டார்.

பொருள்கள் மற்றும் சேவைகளைப் பொறுத்த வரையிலும் முன்பு அதிக வரி விதிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

பிஜேபி அரசு சரக்கு மற்றும் சேவை வரியை அறிமுகம் செய்ததாகவும், அதனால் மாற்றம் ஏற்பட்டது என்றும் அவர் கூறினார்.

தற்போது சீர்திருத்தங்கள் மூலமாக விலைகள் மேலும் குறைந்து மக்களுக்கு சேமிப்பு அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் தொடர்பாக மக்கள் மற்றும் வியாபாரிகளிடம் பிஜேபி தொண்டர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

விமானப் பயணிகளின் பயணத்தை எளிதாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக சிவில் விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

விஜயவாடா சர்வதேச விமான நிலையத்தில் Udan Yatri Cafe எனப்படும் உணவத்தை நேற்று அவர் திறந்து வைத்தார்.

சென்னை, கொல்கத்தா உள்ளிட்ட நகரங்களுக்குப் பிறகு ஏழாவதாக விஜயவாடாவில் இந்த உணவகம் திறக்கப்பட்டுள்ளது என்றும், இங்கு குறைந்த விலையில் உணவுகள் கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.

படிப்படியாக பல்வேறு விமான நிலையங்களிலும் இது அமைக்கப்படும் என்றும் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்தார்.

<<<<>>>>

பாதுகாப்புப் படை விமான கண்காட்சி சென்னை நந்தம்பாக்கத்தில்

அக்டோபர் 7ஆம் தேதி முதல் 9ஆம் தேதி வரை நடைபெற உள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் குறித்து பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங்கை, மாநில தொழில்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா நேற்று சந்தித்துப் பேசினார்.

இந்தக் கண்காட்சிக்கான பணிகளின் முன்னேற்றம் குறித்து பாதுகாப்புத்துறை அமைச்சரிடம் விளக்கியதாக சமூக வலைதளத்தில் திரு. டி.ஆர்.பி. ராஜா கூறியுள்ளார்.

மத்திய அரசின் ஆதரவுக்காக பாதுகாப்புத்துறை அமைச்சருக்கு நன்றி தெரிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் அமைக்கப்படும் பாதுகாப்பு தொழில் வழித்தடம் சுயசார்பு இந்தியாவுக்கு வலு சேர்க்கும் என்றும் திரு. டி.ஆர்.பி. ராஜா கூறியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் 3 ஆயிரத்து 700க்கும் மேற்பட்ட ஆலயங்களில் குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளதாக மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர் பாபு கூறியுள்ளார்.

சென்னை நகரம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதியில் உள்ள ஆலயங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் திருப்பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் திரு. சேகர் பாபு தலைமையில் சென்னையில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பேசிய அவர், சென்னை மண்டலத்தில் உள்ள 8 ஆலயங்களில் விரைவில் குடமுழுக்கு நடத்தப்பட உள்ளதாகத் தெரிவித்தார்.

இந்த ஆண்டு இறுதிக்குள் சென்னையில் 50 ஆலயங்களில் குடமுழுக்கு நடத்தப்படும் என்று திரு. சேகர் பாபு கூறினார்.

**<<<<>>>>**

தமிழகத்தின் ஓரிரு இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதியில் பல்வேறு இடங்களில் இன்று அதிகாலை மழை பெய்தது.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் அடுத்த சில மணி நேரங்களுக்கு லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

கரூரில் ஏற்பட்ட கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக சமூக வலைதளங்களில் வதந்தி பரப்பியதாக கூறி 25 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

புகார்களின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்கள் மீது கைது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

கரூர் கூட்ட நெரிசல் குறித்து வதந்தி பரப்பியதாக கூறி 25 பேர் மீது வழக்குப் பதிவு செய்து 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளதற்கு பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், துயர சம்பவம் நிகழ்ந்துள்ளபோதும் மாநில அரசு சர்வாதிகாரத்தை கையில் எடுத்திருப்பதாக குற்றம் சாட்டியுள்ளார்.

நேர்மையான விசாரணை நடத்துவதை தவிர்த்து மக்களை திசை திருப்பும் வகையில் இதுபோன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

சி.பி.ஐ. விசாரணை மூலம் உண்மையைக் கண்டறிய வேண்டும் என்றும், எதிர்க்குரல்களை முடக்க கூடாது என்றும் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

<<<<>>>>

இனி, மக்களின் மனதை வென்ற மத்திய அரசின் திட்டங்கள்...

(Opening Tune - 7 Sec)

சேவை, நல்லாட்சி என்பதை தாரக மந்திரமாக கொண்டு ஓய்வின்றி பணியாற்றி வரும் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, சிறந்த நிர்வாகத்தின் மூலம் மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது.

இதுகுறித்த சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது, அறிவுசார் வல்லரசாக இந்தியாவை உருவாக்கும் நோக்கில், கல்வித்துறையின் வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகள்.

(சவுண்ட் பைட் 2.09 min)

கார்-க                                                                டெஸ்க் 8+31 = 39

(VO)பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, கடந்த 11 ஆண்டுகளாக இளையோரின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

தரமான கல்வி, திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு போன்றவற்றை அளித்ததோடு மட்டுமல்லாமல், இளையோரை தொழில் முனைவோராக உருவாக்குவதற்கான திட்டங்களையும் மத்திய அரசு செயல்படுத்தியுள்ளது.

கல்வித்துறையின் வளர்ச்சிக்காக, பிஎம் ஸ்ரீ, Nipun பாரத் இயக்கம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளது.

IIT, IIM மற்றும் எய்ம்ஸ் கல்வி நிறுவனங்களில் பெரிய அளவில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, விரிவாக்கமும் செய்யப்பட்டன.

கல்வித்துறையின் வளர்ச்சிக்கான பெரிய சீர்திருத்த நடவடிக்கையாக, 2020ஆம் ஆண்டு ஜூலை மாதம் தேசிய கல்விக் கொள்கையை மத்திய அரசு அறிமுகப்படுத்தியது.

(VO)-2

புதுதில்லியில் கடந்த ஏப்ரல் மாதம் 29ஆம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, 21ஆம் நூற்றாண்டின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் கல்வித்துறை நவீனமாக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

(சவுண்ட் பைட்ட் – மோடி . . . . செகண்ட்ஸ்)

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, உயர் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் எண்ணிக்கை 51 ஆயிரத்திலிருந்து 70 ஆயிரத்திற்கும் கூடுதலாக அதிகரித்துள்ளது.

எய்ம்ஸ்-ன் எண்ணிக்கையும் 7லிருந்து 23ஆக உயர்ந்துள்ளது.

மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கையும் 387லிருந்து 2 ஆயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ படிப்புகளுக்கான இடங்களும் 2 ஆயிரத்திலிருந்து 2 லட்சமாக உயர்ந்துள்ளது.

(VO)-3

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் நோக்கில், இளையோரின் நலனை கருத்தில் கொண்டு, மத்திய அரசு இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

*(Closing Signature Tune)*

<<<<>>>>

சென்னை வானொலி நிலையத்தின் நிகழ்ச்சி பிரிவு தலைவர் திரு. வி. ரமேஷ்பாபு இன்று பணி ஓய்வு பெறுகிறார்.

நேரடி ஒலிபரப்பு, விளையாட்டுத்துறை நிகழ்ச்சிகள் போன்றவற்றில் இவர் தனி முத்திரை பதித்தவர்.

காரைக்கால் உள்ளிட்ட வானொலி நிலையங்களிலும் இவர் பணியாற்றியுள்ளார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணத்தில் தேவாலயம் ஒன்றில் துபாக்கி ஏந்திய நபர் சுட்டத்தில் 4 பேர் உயிரிழந்தனர். 8 பேர் காயமடைந்தனர்.

<<<<>>>>

மால்டோவாவில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் PAS கட்சி வெற்றி பெற்றது.

<<<<>>>>

மொழிபெயர்ப்பு பணிகளில் உள்ளவர்களை கௌரவிக்கும் வகையில் சர்வதேச மொழிபெயர்ப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

<<<<>>>>

புதுதில்லியில் ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று தொடங்கி வைக்கிறார்.

<<<<>>>>

கரும்பு உற்பத்தி மற்றும் அதன் மூலமான வருவாயை அதிகரிப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் புதுதில்லியில் மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் இன்று பங்கேற்கிறார்.

<<<<>>>>

தனிநபர் டிஜிட்டல் தரவு பாதுகாப்பு சட்டத்தின் இறுதி செய்யப்பட்ட விதிகளை மத்திய அரசு இன்று வெளியிடுகிறது.

<<<<>>>>

சர்வதேச காது கேளாதோர் மற்றும் சைகை மொழி தினத்தை முன்னிட்டு திருப்பத்தூரில் மாவட்ட ஆட்சியர் திருமதி சிவசௌந்தரவல்லி தலைமையில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

<<<<>>>>

கம்போடியாவில் இருந்து சென்னைக்கு கடத்தி வரப்பட்ட 35 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருட்களை விமான நிலையத்தில் வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

<<<<>>>>

காரைக்குடியில் உள்ள CSIR மத்திய மின் வேதியியல் ஆய்வுக் கழகத்தின் 84வது ஆண்டு தினம் நேற்று கொண்டாடப்பட்டது.

<<<<>>>>

சென்னையில் 2 நாட்கள் நடைபெற்ற வேளாண் வணிக திருவிழாவில் ஒரு லட்சத்து 57 ஆயிரம் பேர் பங்கேற்றதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

***விளையாட்டுச் செய்திகள்***

ஐ.சி.சி. மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

இதில் இந்தியா, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, பங்களாதேஷ், நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா, இலங்கை ஆகிய 8 அணிகள் பங்கேற்கின்றன.

குவஹாத்தி, மும்பை, விசாகப்பட்டினம் ஆகிய இடங்களில் நவம்பர் 2ஆம் தேதி வரை போட்டிகள் நடைபெற உள்ளன.

குவஹாத்தியில் இன்று நடைபெறும் முதலாவது ஆட்டத்தில் இந்தியா - இலங்கையை எதிர்கொள்கிறது.

இப்போட்டி மாலை 3 மணிக்கு தொடங்குகிறது.

<<<<The End>>>>